

வருடாந்த அறிக்கை

2017

புத்தசாசன நிதியம்

இல.135
சிறீமத் அநாகரிக தர்மபால மாவத்தை
கொழும்பு 07

தொலைபேசி - 0112303293
மின்னஞ்சல் - bsfund@mbs.gov.lk
இணைய தளம் - www.mbs.gov.lk/si/com-akeeba/buddhasasana-fund

உள்ளடக்கம்

பக்க இல.

01. புத்தசாசன நிதியம்

1.1 நோக்கு 1

1.2 செயற்பணி 1

1.3 நோக்கங்கள் 1

1.4 செயற்பாடு 1

1.5 சட்ட வரைமுறைகள் 2

02. நிருவாக கட்டமைப்பு 3

03. பதவியினர் 3

04. செயலாற்றுகை முன்னேற்றம்

4.1 புதிய பிக்கு நிறுவனங்களின் பேணுகைக்கான நிதிசார் உதவுகையினை வழங்குதல் 4-5

4.2 புதிய பிக்கு நிறுவனங்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகளினை நடாத்துதல் 6-7

4.3 குறைவிருத்தியுடைய விகாரைகளுக்கான சுகாதார நலன் பேணல் வசதிகளுக்கான உதவுகையினை வழங்குதல் 7

4.4 சம்புத்த ஜயந்தி சமனீர லமைப் பரிசில் அனுசரணை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 7-8

4.5 தம்பதீவிலுள்ள வணக்க தலங்களிலுள்ள வயதான துறவிகளுகு வாய்ப்புக்களை வழங்குதல் 8-10

4.6 பிக்கு வைத்திய உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 11-12

05. எதிர்கால இலக்குகள் 12

06. நிதி முகாமைத்துவம்

6.1 வருமான மற்றும் செலவினக் கணக்கு 13-14

6.2 மீதியனை செவ்வை பார்த்தல் 15-18

6.3 ஐந்தொகை 19

6.4 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 20-25

01. புத்தசாசன நிதியம்

1.1 நோக்கு

பௌத்த மதத்தின் கொள்கைகளையும் விழுமியங்களையும் நிலை நிறுத்தும் நல்லொழுக்கமும் இறை நம்பிக்கையும் நிறைந்த சமுதாயத்தினை உருவாக்குதல்.

1.2 செயற்பணி

சம்புத்தாசனத்தினைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக துறவிகளின் ஆன்மீக மற்றும் சமூக மேம்பாட்டிற்குப் பங்களிப்பினை வழங்குவதோடு விகாரைகளின் வசதிகளினை மேம்படுத்தி புத்தசாசனத்தின் ஸ்திரத்தன்மைக்கான நடவடிக்கைகளினை எடுத்தல்.

1.3 நோக்கங்கள்

I. புத்தசாசனத்தினைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

II. புத்தசாசனத்தினை வளர்த்தெடுப்பதற்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.


1.4 நிதியத்தின் செயற்பாடுகள்

1. 5 இற்கு மேற்பட்ட புதிய துறவிகளுக்கு புதிய துறவிகளுக்கான அறிவூட்டலினை வழங்கி வருகின்ற நிறுவனங்களுக்கு மாதாந்த நிதிசார் உதவுகையினை வழங்குதல்.
2. புதிய நிறுவனங்களிலுள்ள புதிய பிக்குகளின் தம்ம சார்ந்த அறிவு மற்றும் நடைமுறைகளின் வருடாந்த மதிப்பாய்வு.
3. நாடு பூராகவும் குறைந்த வசதிகளுடன் காணப்படுகின்ற விகாரைகளுக்கான பௌதீகசார் தேவைகளினை வழங்குதல்.
4. சம்பத்துவ ஜயந்தி சமனெற அனுசரணை நிகழ்ச்சித்திட்டம்
5. துறவிகளுக்கான மருத்துவ உதவித் திட்டத்தினை அமுல்படுத்துல்.
6. துறவறத்தில் ஈடுபட்டு வரும் வயதான மற்றும் வயது குறைந்த துறவிகளுக்கு தம்மம் மீதான அறிவினை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

1.5 நிதியத்தினை தாபிப்பதில் காணப்படும் சட்ட வரையறைகள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 9 ஆவது உறுபுரையானது, "இலங்கைக் குடியரசு பௌத்தத்திற்கு முதன்மையான இடத்தை வழங்குவதுடன், அனைத்து மதங்களுக்கும் உறுதியளிக்கும் அதே வேளையில் உறுப்புரைகள் 10 மற்றும் 14(1) (ஈ) இனால் அளிக்கப்பட்டுள்ள அனைத்து சமயங்களினதும் உரிமைகளினைப் பாதுகாத்து வளர்ப்பது" அரசின் கடமையாகும்.


அந்த தொழிற்பாட்டிற்கு இணங்க, புத்தசாசன நிதியமானது 1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் புத்தசாசனத்தைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் நிதி திரட்டவும் தொகுக்கவும் தாபிக்கப்பட்டதாகும். மேற்படி சட்டத்தின்படி, புத்தசாசன நிதியம் புத்தசாசனத்தைப் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை நிருவகிப்பதற்கும் உதவுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் மேலும் நிதியத்தின் தொழிற்பாட்டினை எளிதாக்கும் ஏனைய அனைத்து ஆக்கபூர்வமான மற்றும் தற்செயலான நடவடிக்கைகள் மற்றும் விடயங்களையும் மேற்கொள்ளுதலும் வேண்டும்.



ශ්‍රී ලංකා
ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ
පාර්ලිමේන්තුව

1990 අංක 35 දරන
බුද්ධ ශාසන අරමුදල පනත

02. நிருவாக கட்டமைப்பு



03. பதவியினர்

1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இல. புத்தசாசன நிதியச் சட்டத்தின் பிரிவுகள் 7 (ஊ) மற்றும் 14 இன் கீழ் கட்டுப்பாட்டுச் சபையினால் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கமைவாக, நிதியத்தின் பிரதம நிறைவேற்றுனராக நியமிக்கப்பட்ட செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். செயலாளரானவர் பிரதம கணக்கீட்டு அலுவலராகவும் விளங்குவதுடன் செயலாளரானவர், தேவையான போதெல்லாம், புத்தசாசன அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள அரசாங்க பதவிநிலை உத்தியோகத்தர்களிலிருந்து பெயர் குறிப்பீடு செய்யப்படுதலும் வேண்டும்.

அதற்கிணங்க, இலங்கை நிருவாக சேவையின் தரம் 1 இனைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர்தனது கடமைகளுக்கு மேலதிகமாக இந்தச் செயலாளர் பதவினையும் வகிப்பார். அத்துடன் அமைச்சின் பதவியினரும் நிதியத்தின் செயற்பாடுகளுக்கான ஆதரவினை வழங்கி வருகின்றனர்.

04. நிதியத்தின் செயலாற்றுகை

4.1 புதிய பிக்கு நிறுவனங்களுக்கான நிதி உதவுகையினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

லௌகீக வாழ்க்கையை விட்டு துறவு வாழ்வில் சேரும் பிள்ளையொன்று சிறிது காலத்திற்குப் பிறகு பிரிவேனா கல்விக்கு அனுப்பி வைக்கப்படும். ஒரு குழந்தை இரண்டு அல்லது மூன்று வருடங்கள் விகாரையில் தங்கியிருந்து, துறவியின் வாழ்க்கையைப் பற்றியும், தம்மத்தைப் பற்றியும் புரிந்துகொண்டு தானாக முன்வந்து துறவு வாழ்க்கையில் நுழைவது வழக்கமாகும். ஆனால் தற்போது, குருத்துவ வாழ்வில் நுழையும் குழந்தைகளுக்கு, துறவியாக இருப்பதற்கு முன், துறவற வாழ்க்கையைப் பற்றிய புரிதல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

இத்தகைய தேவையை புரிந்து கொண்டு புத்தசாசன நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட உற்பத்தித் திறன் சார்ந்த கருத்திட்டமாக இந்த புதிய பிக்கு கல்வித் திட்டத்தை அடையாளப்படுத்த முடியும். ஒரு புதிய பிக்கு நிறுவனத்தின் நோக்கமானது சிறு பராயத்தினைக் கொண்ட புதிய துறவிகளுக்கு பிக்கு மதத்தின் மீது அன்பை வளர்ப்பது, ஒரு பிக்குவின் வாழ்க்கையில் நல்ல அணுகுமுறைகளை உருவாக்குவது மற்றும் சடங்குகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய அறிவு நிறைந்த ஒரு பிக்குவை உருவாக்குவதேயாகும்.

தசா தம்ம சூத்திரத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதன்படி, ஒரு முழுமையான பிக்குவை சமூகத்திற்கு முன்வைப்பதில் புதிய பிக்கு நிறுவனம் ஈடுபட்டுள்ளதுடன் ஒரு பிக்குவின் வாழ்க்கை என்பது பௌத்த நடைமுறைகளுக்கமைவாகவும் ஒரு பிக்குவுக்கும் சாதாரண மனிதனொருவனுக்குமிடையிலான வித்தியாசத்தின்படி அமையப் பெற்ற வாழ்க்கை என்பதை புரிய வைக்கின்றதுடன் பிக்குவின் மேலாதிக்கம், பிறருக்குச் சுமையாக இல்லாமல் பிக்கு வாழ்வினை வாழ்வதற்கான வழியினைப் போதிக்கின்றது.

<u>உதவுகையினைப் பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடுகள்</u>


I. அறநெறிப் பாடசாலை தவிர்ந்த வேறு எந்தப் பாடசாலையும் விகாரையினுள் நடாத்தப்படுதலாகாது.
II. அங்கே மும்மணிகளும் இருத்தல் வேண்டும்.
III. புதிய துறவிகள் வதிவிடங்களிலேயே கல்வி கற்றல் வேண்டும்.
IV. தங்குமிட வசதிகள், நீர், மின்சாரம், கழிவறைகள் போன்ற வதிவிடங்களுக்கான அடிப்படைத் தேவைப்பாடுகள் காணப்படுதல் வேண்டும்.
V. விகாரையானது, காலையுணவு மற்றும் மதிய உணவுகளுக்காக போதுமான உணவுகளை வழங்குவற்கான பங்களிப்பினைச் செய்பவர்களினைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
VI. இளம் புதிய துறவிகளை பயிற்றுவிப்பதற்கு கற்றறிந்த மற்றும் நல்லொழுக்கமுள்ள ஆசான் பிக்கு ஒருவர் இருத்தல் வேண்டும்.

2017 ஆம் ஆண்டில் நிதி உதவுகை அளிக்கப்பட்ட நிறுவனங்கள்

தொடர் இல.	நிறுவனம் (பெயர், முகவரி)	நிறுவனங்களிலுள்ள புதிய துறவிகளின் எண்ணிக்கை
1	இந்திரஜோதி புதிய பயிலுனர் நிறுவகம், களுத்துறை	2
2	சிறிசுத்தச புதிய பயிலுனர் நிறுவகம், காலி	13
3	தம்மபால புதிய பயிலுனர் நிறுவகம், குணேபன	8
4	சிறிசரிபுத்த புதிய பயிலுனர் நிறுவகம், பள்ளேபொல	3
5	மிஹிந்து புதிய பயிலுனர் நிறுவகம், தல்தென	7
6	வித்தியதீப புதிய பயிலுனர் நிறுவகம், காலி	2
7	சிறிதம்மரத்ன புதிய பயிலுனர் நிறுவகம், கண்டி	15
9	சுத்தாமனந்த புதிய பயிலுனர் நிறுவகம், கட்டுகஸ்தோட்டை	18
10	மஹாமஹிந்த புதிய பயிலுனர் நிறுவகம், அம்பகோட்டை	6
11	சிறி ஜினரத்ன புதிய பயிலுனர் நிறுவகம், தம்புள்ள	13
13	சரணந்த புதிய பயிலுனர் நிறுவகம், கொட்டபொல	6
14	வித்தியவன்ஸ புதிய பயிலுனர் நிறுவகம், அம்பகஸ்வெவ	11
15	சிறிபரகும்ப புதிய பயிலுனர் நிறுவகம், அமுனுகொட	5
16	சிறி ஆரியவன்ச புதிய பயிலுனர் நிறுவகம், தங்காலை	8
18	சம்புத்தலோக புதிய பயிலுனர் நிறுவகம், அம்புல்லபுர	7
	மொத்தம்	**124**

இந்த ஆண்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வரும் 124 புதிய பயிலுனர் துறவிகளுக்கு ரூபா.1365000/- நிதி உதவுகை அளிக்கப்பட்டுள்ளது.






4.2 புதிய பிக்கு நிறுவனங்களின் வருட இறுதியில் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம்.


இந்தப் புதிய பிக்கு நிகழ்ச்சித்திட்டமானது புத்தசாசன நிதியம் தாபிக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட உற்பத்தித் திறன் வாய்ந்த கருத்திட்டமொன்றாக தெளிவாக அடையாளங் காணப்பட முடியும். புதிய பிக்கு நிறுவனமொன்றின் நோக்கங்களாக, புதிய பிக்குகளின் அன்பினை அதிகரித்தல், பிக்கு ஒருவரின் வாழ்வினை நோக்கியதான சிறந்த நற்பண்புகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் சடங்கு மற்றும் நடைமுறைகள் தொடர்பான அறிவில் போதுமான அறிவினைக் கொண்டுள்ள பிக்கு ஒருவரினைத் தோற்றுவித்தல்.

இத்தகைய நோக்கங்களுக்காகப் பயிற்றுவிக்கப்பட்ட புதிய துறவிகளின் அறிவு மற்றும் அவர்களின் நடத்தை என்வற்றினைப் ஆய்வு செய்யும் நடவடிக்கையானது இங்கே மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க, போதுமான பயிற்சியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஒவ்வொரு வரு இறுதியிலும் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையினைப் பெறுகின்றார்கள். இத்தகைய மதிப்பீட்டில், எழுத்து மூலமான பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை என்பனவும் நாயக்க தேரர்களினைக் கொண்ட விசாரணைச் சபையினால் நடாத்தப்படும். புத்தசாசன நிதியமானது இந்தப் பரீட்சையில் அதிவிசேட மற்றும் மிகச் சிறந்த சித்தியினைப் பெற்றுக் கொள்கின்ற புதிய துறவிகள் தொடர்பில் விசேட மதிப்பாய்வினை நடாத்துகின்றது.

அமுல்படுத்தப்படும் முறை

I. பதிவு செய்யப்பட்ட பிக்கு நிறுவனங்களிலிருந்து பரீட்சைக்காக விண்ணப்பங்களைக் கோருதல்.
II. பரீட்சை நடவடிக்கைகளினை ஒழுங்கமைத்தல்
III. பரீட்சைகளினை நடாத்துதல்
IV. புலமைப் பரிசில்களை பரிசளித்தல்







2017 இல் நடாத்தப்பட்ட பரீட்சை தொடர்பான தகவல்கள்

❖ பரீட்சை நடாத்தப்பட்ட இடம்	களனி, பேலியகொடை, உதயலங்கர பிரிவென
❖ பரீட்சை நடாத்தப்பட்ட திகதியும் நேரமும்.	2017.12. 16 (மு.ப. 9.00 – பி.ப 3.00)
❖ பரீட்சைக்குத் தோற்றிய துறவிகளின் எண்ணிக்கை	45
❖ செலவிட்ட தொகை	ரூபா. 754,304/=

4.3 குறைவிருத்தியடைய விகாரைகளுக்கான சுகாதார நலன் பேணல் வசதிகளினை வழங்குதல்

அடிப்படை வசதிகள் இல்லாத பல்வேறு விகாரைகள் நாடு பூராகவும் உள்ளன. எனவே, இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம், சுகாதார நலன் பேணல் சதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகளின்றி காணப்படும் துறவிகள் வசிக்கும் விகாரைகளினை மேம்படுத்துவதேயாகும்.

வருடமொன்றுக்கு ஒரு பிரதேச செயலாளர் பிரிவானது தெரிவு செய்யப்பட்டு அங்கே அப்படை வசதிகளின்றி காணப்படும் ஒரு விகாரைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கமைவாக இந்த வசதிகள் வழங்கப்படுவதுடன் பிரதேச செயலாளர் / பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளரின் பரிந்துரையுடன் புத்தசாசன நிதியத்திற்கு கிடைக்கப் பெறும் கோரிக்கைகளுக்கிணங்க, தெற்கான நிதி உதவுகையானது வழங்கப்படுகின்றது.

இக்கருத்திட்டமானது 2017 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டிருநத போதிலும் இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை.

4.4 சம்புத்த ஜயந்தி சமனேற புலமைப்பரிசில் அனுசரணை நிகழ்ச்சித்திட்டம்

இக் கருத்திட்டமானது சம்புத்தத்வ ஜயந்தி வருடத்திற்க ஏற்புடையதாகும் என்பதுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து துறவுற வாழ்வுக்குள் நுழைந்துள்ள புதிய துறவிகளுக்கும் அவ்வாறே 2014 செப்ரெம்பரின் பின்னர் துறவிகளாகியுள்ள புதிய பிக்குகளுக்குமான விசேடமான புதியதொரு புலமைப்பரிசில் அனுசரணை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாகும். மேற்குறித்த காலப்பகுதியில், துறவற வாழ்வில் பிரவேசித்துள்ள துறவிகளின் கல்வி மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்கு இக்கருத்திட்டம் எதிர்பார்க்கின்றது.

பின்வரும் தகைமைகளினைக் கொண்டுள்ள புதிய துறவிகள் மாத்திரம் இந்தப் புதிய புலமைப்பரிசில் அனுசரணை நிகழ்ச்சித்திட்டத்திற்காக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

I. 2010 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து 2013 வெசாக் வாரத்தின் இறுதி நாள் வரையிலான காலப்பகுதியில் துறவறம் பூண்டுள்ள பிக்கு ஒருவராக இருத்தல் வேண்டும்.

II. துறவறம் பூண்ட திகதியன்று 18 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

III. துறவறம் பூண்டதன் பின்னர் 3 மாதங்கள் கடந்திருத்தல் வேண்டும்.

IV. பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் புதிய துறவியாக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

V. ஒரு விகாரையிலிருந்து ஆகக்கூடுதலாக பத்து துறவிகள்.

VI. 2014 செப்ரெம்பரின் பின்னர் துறவற வாழ்விற்குள் பிரவேசித்துள்ள அனைத்துப் பிக்குகளையும் இந்தப் புலமைப்பரிசில் திட்டத்திற்குள் உள்வாங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய துறவிகளுக்கான சமனேற புலமைப்பரிசில் அனுசரணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதியதொரு துறவிக்கு 2017 ஜனவரியிலிருந்து டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு மாதமொன்றுக்கு ரூபா.700/- வீதம் 669 துறவிகளுக்கு கொடுப்பனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த வருடத்தில் இதற்காக ரூபா.5,855,853.50/- தொகையானது வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்திற்கான கொடுப்பனவானது அஞ்சல் அலுவலகங்களினூடாக மேற்கொள்ளப்படுவதால் இந்தப் பணத்திற்காக அஞ்சல் அலுவலகத்திற்கு செலுத்தப்படும் தரகுப் பணமும் இதனுள் உள்ளடங்குகின்றது.

4.5 பிக்கு மருத்துவ உதவி நிகழ்ச்சித்திட்டம்.

இது இலங்கையின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள துறவிகளுக்கான மருத்துவ உதவி முறையாக அமுல்படுத்தப்படுகின்றது. 2559 ஆவது வெசாக் பண்டிகையினை முன்னிட்டு இலங்கை முழுவதும் தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சையினைப் பெற்று வரும் துறவிகளுக்கு மருத்துவ வசதிகளுக்கான உதவுகை அளிக்கப்பட்டு வருகின்றது.

நாடு பூராகவும் வாழ்ந்து வரும் தகைமை வாய்ந்த துறவிகளுக்கான மருத்துவ பரிந்துரைகளின் அடிப்படையில், பிரதேச செயலாளர் மற்றும் சசனரக்சக சபயின் பதிவாளர் தேரர் ஆகியோரின் பரிந்துரையின் பேரில் துறவிகளுக்கான மருத்துவ உதவுகையாக மாதமொன்றுக்கு ரூபா.5000/- வழங்கப்படுகின்றது.

தொ.இல.	துறவி / சில்மாதாவின் பெயர்	நோய்
1	வண.டபிள்யூ.விமலபுத்தி தேரர்	பாரிசவாதம்
2	வண.டபிள்யூ. சுசீம தேரர்	உயர் இரத்த அழுத்தம் மற்றும் ஆஸ்த்மா
3	வண.ஜயசந்த தேரர்	நரம்புத் தளர்ச்சி
4	வண. பி.நாரத தேரர்	சிறுநீரகம் மற்றும் ஈரலின் ஒரு குதியினை தானம் செய்துள்ளமையால் வாழ் நாள் முழுவதற்கும் சிகிச்சை தேவைப்படுகின்றமை.
5	வண. ஏ. புத்தசாசன தேரர்	அரந்தலாவையில் பௌத்த துறவிகள் மீதான படுகொலைச் சம்பவத்தில் ஊனமுற்றவர்.
6	வண. ஏ.விஜிதசிறி தேரர்	குடல் இறக்க நோயினால் பாதிப்புக்குள்ளாகியிருத்தல்.
7	வண.டி.புஞ்ஞானரத்னதேரர்	பாரிசவாதம்
8	வண. டி.ஞானந்த தேரர்	நீரிழிவு
9	வண. தம்மரக்கித தேரர்	சிறுநீரக நோய்
10	வண. ஆர்.ஞானசிங்க தேரர்	சிறுநீரக நோய்
11	வணஜே.தம்மபாலி சில்மானயோ	ஆஸ்த்மா
12	வண. சமேத தேரர்	இதய நோய்
13	வண.ஏ.விமலரத்ன தேரர்	சிறுநீரக நோய் (இதற்காக ரூபா.3000/- இனை அரசாங்கம் வழங்கி வருவதாக பிரதேச செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.)
14	வண.எம்.ரத்னபால தேரர்	சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மாரடைப்பு
15	வண.ஆர்.தேவமித்த தேரர்	இதயம் சீராக இயங்காமை
16	வண.எம்.தம்மஜோதி தேரர்	உடலின் வலது பகுதி சீராக செயற்படாமை
17	வண.டீ.சீலானந்த தேரர்	நுரையீரல் நோய்

18	வண.ஜீ.தம்மசிறி தேரர்	எலும்பு தேய்வடைதல்
19	வண.பீ.ஞானரத்ன தேரர்	சிறுநீரக நோய்
20	வண.ஏ.தமித்த தேரர்	சிறுநீரக நோய்
21	வண.ஏ.சத்தானந்த தேரர்	மாரடைப்பு
22	வண.எம்.ரத்னசார தேரர்	உடலின் ஒரு பகுதி சீராக செயற்படாமை
23	வண.ஜி.தம்மலோக தேரர்	சிறுநீரக நோய்
24	வண.டபிள்யூ.பக்குல தேரர்	தீ விபத்துக்குள்ளாகியமை
25	வண.ஜீ.சாந்தரத்ன தேரர்	உயர் இரத்த அழுத்தம் மற்றும் ஏனைய நோய்கள்
26	வண.சுகதஞான தேரர்	15 வயதிலிருந்து இதய நோய்.
27	வண.எம்.டி.அமரவன்ச தேரர்	சிறுநீரக நோய்
28	வண.எம்.புஞ்ஞானசார தேரர்	எலும்புருக்கி நோய்
29	வண.ஜீ.லங்கானந்த தேரர்	சிறுநீரக நோய்
30	வண.பீ.தமிந்த தேரர்	தைரொயிட் மற்றும் நீரிழிவு நோய்கள்.
31	வண.எம்.ஞானரத்ன தேரர்	இரத்த அழுத்தம், சிறுநீரக நோய்.

இந்த வருடத்தில் 31 துறவிகளுக்கு ரூபா.1645000/- நிதி உதவுகை அளிக்கப்பட்டது.



4.6 வயதான காலத்தில் துறவுற வாழ்வில் பிரவேசித்துள்ள துறவிகளுக்கு செயன்முறைப் பயிற்சியினை வழங்குதல்.

துறவிகள் வயது ஆக ஆக குருமார் வாழ்வில் பிரவேசிக்கும் போக்கு அதிகரித்து வருவதுடன், குருமார் வாழ்க்கையைப் பற்றிய சரியான புரிதல் இல்லாமல் நடந்துகொள்வதால், பாமர பௌத்தர்களால் விரக்தியடைந்து விமர்சிக்கப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. மேலும், சாசனத்திற்குக் கேடு விளைவிக்கும் பலவற்றைச் செய்ய ஆசைப்பட்டு சமூகப் பிழை என்ற தத்துவத்திற்கு ஆளான நிகழ்வுகளும் உண்டு. அதன்படி, இத்தகைய துறவிகளுக்கு குருமார் வாழ்க்கையின் மேன்மை மற்றும் மதகுரு மற்றும் பாமரர்களுக்கு இடையிலான வேறுபாடு மற்றும் அடிப்படை சடங்குகள் மற்றும் இறையியல் தம்ம அறிவைப் பற்றிய அறிவை வழங்குவதற்காக இத்தகைய செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன.

குழந்தைப் பருவத்திற்கு அப்பால் குருத்துவ வாழ்விற்குள் பிரவேசித்த துறவிகள் பற்றிய தகவல்கள் பிரதேச செயலகங்களால் சம்பந்தப்பட்ட பிரதேசத்திலுள்ள மாவட்டச் செயலாளர்கள் ஊடாக கோரப்படுகின்றன. கிடைத்த தகவலின் அடிப்படையில், மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்டச் செயலகத்தின் பௌத்த விவகார இணைப்பாளரின் உதவியுடன் மேற்படி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் ஒழுங்கமைக்கப்படுவதோடு ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் குறைந்தபட்சம் 10 பிக்குகள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.





2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்

மாவட்டம்	குருநாகல்
அமைவிடம்	வாரியபொல பமுனகொட்டுவல்சிபத்தனரம விகாரை
ஒருங்கிணைப்பு	வண. ராஜகீய பண்டித கரக்கொல்லே பியதசி நாயக்க தேரர், சமூக அபிவிருத்தி பதிவாளர், ராமங்க மஹா நிக்காய மற்றும் புத்தசாசன நிதியத்தின் அலுவலகம்.
தொழிற்பாடு	வண. ராஜகீய பண்டித கரகொல்ல பியதஸ்ஸி நியாக தேரர்.
நாட்கள்	03
பங்குபற்றிய பிக்குகளின் எண்ணிக்கை	14
இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை	ரூபா. 112,418.76

05. எதிர்கால இலக்குகள்

2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டம்	2018 இன் செயல்திட்டத்திற்கமைவாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள்.
1.	புதிய பயிலுனர் நிறுவகங்களை பேணுவதற்காக நிதி உதவுகையினை வழங்குதல்	20 புதிய பயிலுனர் நிறுவகங்களை பதிவு செய்தலும் நிதி உதவுகையினை அளித்தலும்.
2.	சம்புத்துவ ஜயந்தி புலமைப்பரிசில் அனுசரணை வழங்கும் திட்டம்.	1350 புதிய பயிலுனர் துறவிகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்குதல்.
3.	நாடு பூராகவுமுள்ள துறவிகளுக்கு மருத்துவ உதவுகையினை அளித்தல்.	மருத்துவ பரந்துரையின்அடிப்படையில், பிரதேச செயலாளர், சசனரக்சக சபையின் பதிவாளர் தேரர் ஆகியோரின் பரிந்துரைகளின்படி, நாடு பூராகவுமுள்ள தகைமை வாய்ந்த துறவிகளில் பெருமளவானோருக்கு மருத்துவ உதவியினை அளித்தல்.
4	வயதான காலத்தில் துறவற வாழ்வுக்குள் பிரவேசித்துள்ள துறவிகளுக்கான பிக்கு வாழ்வு தொடர்பில் செய்முறைப் பயிற்சியினை வழங்குதல்.	8 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
5	நாடு பூராகவும் இடர்பாடுகளினை எதிர்நோக்கியுள்ள விகாரைகளுக்கு சுகாதார நலன் பேணல் வசதிகளினை அளித்தல்.	2018 இல் 30 சுகாதார நலன் பேணல் வசதிகளினை வழங்குதல்.

6 புத்தசாசன நிதியம்

2017.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

6.1 வருமான செலவுக் கணக்கு

வருமானம்	குறிப்பு	2017	2016
		ரூ. ச.	ரூ. ச.
முதலீட்டு வருமானம்	5	51,836,069.22	34,748,961.49
அறநெறி புத்தகங்களின் விற்பனை வருமானம்	6	211,843.77	214,798.52
நன்கொடை மற்றும் ஏனைய வருமானம்	4	11,000.00	74,675.57
மொத்த வருமானம்		52,058,912.99	35,038,435.68
கழிப்பனவு: கருத்திட்ட செலவினம்			
புதிய பிக்கு நிறுவனங்களுக்கான உதவுகை		1,365,000.00	1,015,000.00
புதிய பிக்கு நிறுவனங்கள் – மேற்பார்வைச் செலவு		40,703.00	14,245.00
புதிய அனுசரணை பங்களிப்பு கட்டணம்		5,855,853.50	4,454,026.50
பிக்கு மருத்துவ உதவி		1,645,000.00	260,800.00
சுகாதார நலன் பேணுதல் நடவடிக்கைக்கான நிதி உதவுகை		-	2,100,000.00
உடுடும்பர காசோலை வழங்கலுக்கான செலவுகள்		-	138,000.00
தானத்திற்கான புத்தகம் வழங்கல்		-	-
புதிய பிக்கு நிறுவனசார் பரீட்சைகள்		754,304.00	8,350.00
வயது முதிர்ந்த பிக்கு ஒழுக்கமுறை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட செலவுகள்		112,418.76	341,139.00
நிருவாகச் செலவுகள்			
காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும்		24,905.00	24,866.00

கட்டுப்பாட்டுச் சபைக்கான கொடுப்பனவும் பதவியினருக்கான சம்பளமும்	16,819.00	342,032.27
பிரயாணச் செலவுகள்	38,870.00	52,082.00
கணனி பயிற்சிக் கொடுப்பனவு		
சம்பாத்தியங்கள் மீது செலுத்தப்பட்ட வரிகள்	151,500.00	218,000.00
மேலதிக நேரம்	17,112.00	14,694.00
விருந்தோம்பல் செலவுகள்	11,571.00	15,980.00
செலவினம்		67,566.00

<u>பல்வேறு தேய்மான ஒதுக்கீடுகள்</u>

பாதுகாப்பு பெட்டகம்	4,310.00	4,310.00
கட்டிட நிருமாணம்	87,500.00	87,500.00
தளபாட உபகரணம்	5,775.00	5,775.00
ஒலிபெருக்கி	5,735.00	5,735.00
உபகரணமும் பொருத்துக்களும்.	16,294.00	16,294.00
மொத்தச் செலவுகள்	**10,153,670.26**	**9,186,394.50**
குறித்த ஆண்டுக்கான தேறிய மிகை / (பற்றாக்குறை)	**41,905,242.73**	**25,852,041.18**

6.2 புத்தசாசன நிதியம்

2017.12.31 இலுள்ளவாறான மீதி செவ்வை பார்த்தல்

		வரவு	செலவு
பாதுகாப்புப் பெட்டகம்		57,456.00	
அலுவலக தளபாடம்		57,750.00	
பொருத்துகளும் அலுவலக உபகரணங்களும்		162,940.00	
தேசி யசேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக்கள்		180,400,000.00	
இலங்கை வங்கி முதலீடு		30,843,159.67	
தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரணை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்		39,770,000.00	
தேசிய சேமிப்பு வங்கி புதிய நிறுவனசார் கருத்திட்டம்.		30,583,224.22	
திறைசேரி உண்டியல் முதலீடு (இலங்கை வங்கி)		87,996,550.60	
மக்கள் வங்கி நிலையான வைப்புக்கள்		112,673,805.48	
தேசிய சேமிப்பு வங்கியின் மருத்துவ உதவி கருத்திட்டம்		15,000,000.00	
தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு கணக்கு இல.01125		6,940,331.41	
ஒலிபெருக்கி		45,885.00	
காணிகள்		7,000,000.00	
அநுராதபுரத்தில் கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிருமாணங்கள்		3,500,000.00	
புத்த ஜயந்தி நாணய இருப்பு		317,400.00	
பல்வேறு பௌத்த நூல்கள்		1,094,626.49	
பாளி ரீக்க சிங்கள மொழிபெயர்ப்புக்கள்		3,787,873.88	
'பௌத்தத்தின் 1600 வருடங்கள்' புத்தகம்		5,490,240.00	
புத்தக விற்பனைச் செலவு		1,232,607.23	
நெதிமால பௌத்த கலாச்சார நிலையத்திடமிருந்தான புத்தகங்கள்		7,988,635.88	

பாளி ரீக்கவுக்கான ஆங்கில மொழிபெயர்ப்புக்கான நெதிமால பௌத்தம்		1,080,165.00	
பௌத்த கலாச்சார நிலையத்தில் புத்தக விற்பனை		3,955,745.33	
பெறப்பட வேண்டிய திறைசேரி உண்டியல்கள் வட்டி		2,283,213.33	
பெறப்பட வேண்டிய தேசிய சேமிப்பு வங்கி வட்டி		10,020,186.29	
புதிய கார்டியன் வட்டிப் பெறுவனவுகள்			3,986,316.19
புதிய நிறுவனசார் கருத்திட்டங்களின் பெறப்பட வேண்டிய வட்டி		3,944,722.87	
தேசிய சேமிப்பு வங்கி – மருத்துவ உதவிகள் நிலையான வைப்புக்களுக்காக பெறப்பட வேண்டிய வட்டி		0.00	
பெறப்பட வேண்டிய மக்கள் வங்கி நிலையான வைப்பு		479,178.08	
புதிய நிறுவன வட்டிப் பெறுவனவுகள்		9,079,414.63	
கூட்டுறவு சந்தைப்படுத்தல் அபிவிருத்தி சங்கத்திற்கு எரிபொருளுக்கான பெறுகைகள்			3,171,238.52
றோயல் ஆசியட்டிக் சொசைற்றி		7,282.00	
நிறுத்தி வைத்த சம்பாத்தியங்களின் வட்டி மீதான செலுத்தத்தக்க வரிகள்		659,667.96	
மத்திய வங்கி		0.00	
இலங்கை வங்கி		22,932,752.12	
செலுதப்பட வேண்டிய புதிய நிறுவன சார் கொடுப்பனவுகள்		395,110.20	
செலுத்தப்பட வேண்டிய புதிய அனுசரணை புலமைப்பரிசில்கள்			240,000.00
பாளி ரீக்காவுக்கான நெதிமால பௌத்த கலாச்சார நிலையம்			0.00
“பௌத்தத்தின் 1600 வருடங்கள்” புத்தகத்திற்கான கட்டுரைகளை வழங்குதல்.			544,409.50
சுனாமி உதவி			1,168,025.00
புத்தசாசன நிதியம்			1,348,796.00

தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல.100011259873 வட்டி			538,277,994.06
தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல. 100010101125 வட்டி			29,983.94
தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல 100011259873			241,295.83
புதிய அனுசரணை புலமைப்பரிசில் கொடுப்பனவுகள்		747,224.72	
புதிய நிறுவன கொடுப்பனவுகள்		5,855,853.50	
பிக்கு மருத்து உதவி கொடுப்பனவு		1,365,000.00	
புதிய நிறுவன பரீட்சைக் கணக்கு		1,645,000.00	
அலுவலக சம்பளங்களும் கொடுப்பனவுகளும்		7,330.00	
தமிழ் அளநெறி பாடசாலைக்கான நிதி உதவுகை		754,304.00	
வயதான பிக்கு நிகழ்ச்சித்திட்ட செலவினம்		112,418.76	
சுகாதாரம் பேணுதலுக்கான நிதி உதவுகை			350,000.00
கட்டிடங்களின் திரண்ட சிதைவு			30,170.00
பாதுகாப்பு பெட்டகத்தின் திரண்ட தேய்மான ஒதுக்கீடு			23,100.00
தளபாடம் மற்றும் அலுவலக உபகரணத்தின திரண்ட சிதைவு			22,940.00
ஒலிபெருக்கிகளின் திரண்ட சிதைவு		87,500.00	
பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரண தேய்மானத்துக்கான ஒதுக்கீடு		4,310.00	
கட்டிடங்கள்		5,775.00	
சேதமடைந்த பெட்டகம்		5,735.00	
தளபாடம் மற்றும்அலுவலக உபகரணங்களின் சிதைவு		16,294.00	
ஒலிபெருக்கித் தேய்மானம்			19,847,251.35
பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் தேய்மானம்.			8,205,709.30
தேசிய சேமிப்பு வங்கி நேரடி வைப்பு வட்டி			3,074,877.11
இலங்கை வங்கி திறைசேரி உண்டியல் வட்டி			11,629,396.98

இலங்கை வங்கி வட்டி			1,650,000.00
மக்கள் வங்கி வட்டி			1,444,451.00
மருத்துவ உதவி			6,472,266.18
புத்தக விற்பனை வருமானம்			110,000.00
நன்கொடைகள்		99,000.00	
நன்கொடை பெறுவனவுகள்		40,703.00	
நன்கொடை விடுவிப்பு		11,571.00	
உடுடும்புர காசோலை வநியோக வைபவம்		0.00	
புதிய நிறுவனங்களின் மேற்பார்வைச் சபையின் கொடுப்பனவுகள்		38,870.00	
விருந்தோம்பல் செலவு		17,575.00	
ஏனைய செலவுகள்		151,500.00	
பிரயாணச் செலவுகள்		0.00	
காகிதாதி கொள்வனவு		0.00	
கணனி கொடுப்பனவு		17,112.00	
மேலதிக நேரம்		16,819.00	
கட்டுப்பாட்டுச் சபை கொள்வனவு		734,173.15	
தேசிய சேமிப்புக்கள் கார்டியன் அனுசரணையினால் பெறப்பட வேண்டிய வட்டி		1,419,406.16	
பெறப்பட வேண்டிய இலங்கை வங்கி வட்டி		16,819.00	
மொத்தம்			
		601,933,396.96	**601,933,396.96**

6.3 புத்தசாசன நிதியம்

2017.12.31 இலுள்ளவாறான ஐந்தொகை

	குறிப்பு	2017	2016
		ரூ. ச.	ரூ. ச.
சொத்துக்கள்			
நிலையான சொத்துக்கள்	1	10,332,645.00	10,452,259.00
முதலீடு	2	503,954,295,10	483,767,199.59
தேறிய நடைமுறைச் சொத்து	3	73,717,358.87	59,879,597,65
		588,004,298.97	**554,099,056.24**
இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது			
புத்தசாசன நிதியம்		580,183,236.79	538,277,994.06
பல்வேறு நன்கொடைகள்	4	6,472,266.18	14,472,266.18
சுனாமி உதவி		1,348,796.00	1,348,796.00
		588,004,298.97	**554,099,056.24**

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட இத்தகைய நிதிக் கூற்றுக்கள் எதிர்காலத்தில் அங்கீகாரத்திற்காக புத்தசாசன நிதியத்தினால் சேகரிக்கப்படும் முதலாவது கட்டுப்பாட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

புத்தசாசன நிதியத்தின் கட்டிப்பாட்டுச் சபையானது புத்தசாசன நிதியத்தின் 2016.12.31 இலுள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட ஐந்தொகை மற்றும் கணக்குக் கூற்றுக்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகும்.

ஜீ.என்.முனவீர
விதான

கணக்காளர்

புத்தசாசன நிதியம்

டபிள்யூ.ரி.எச்.ருசிர

செயலாளர்

புத்தசாசன நிதியம்

தேசபந்து பேராசிரியர்.கபில குணவர்தன
செயலாளர்
புத்தசாசன அமைச்சு
புத்தசாசன நிதியத்தின்
கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்

ஜீ.பி.கரவிட்ட
பொது நம்பிக்கைப்பொறுப்பாளர்
புத்தசாசன நிதியத்திகட்டுப்பாட்டுச்
சபை உறுப்பினர்

6.4 கணக்காய்வு அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல - සී.එස් /සී /බීඑස්එෆ්201/01/7/එෆ්ඒ **திகதி –** 2021 ஒக்டோபர் 26

செயலாளர்,

புத்தசாசன நிதியம்

2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான புத்தசாசன நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மேற்குறித்த அறிக்கையானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்:1. செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

2. செயலாளர், நிதி அமைச்சு

செயலாளர்,

புத்தசாசன நிதியம்.

2017 டிசம்பர் 31 இல் முடிடைந்த ஆண்டுக்கான புத்தசாசன நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

2017 டிசம்பர் 31 இலுள்ளவாறான புத்தசாசன நிதியத்தின் ஐந்தொகை மற்றும் 2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் என்பன குறித்த திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கங்கள் என்பனவற்றினைக் கொண்டுள்ளன. 2017.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இல. புத்தசாசன நிதியச் சட்டத்தின் உறுப்புரை 12(4) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உறுப்புரை 154(3) கொண்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக, எனது பணப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த அறிக்கையானது மேற்குறித்த நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானங்கள் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கையின் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக இத்தகைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதும், நியாயமான சமர்ப்பிப்புகளைச் செய்வதும், மோசடிகள் அல்லது தவறான விளக்கங்கள் காரணமாக எழக்கூடிய கணிய ரீதியான பிழையான அறிக்கைகள் இல்லாமல் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இத்தகைய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தினைத் தெரிவிப்பது எனது கடமையாகும். நான் எனது கணக்காய்வினை உயர்தர கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச சகணக்காய்வு நியமங்களுக்கமைவாக (ISSAI 1000-1810) நடாத்தியுள்ளேன். இத்தகைய நியமங்கள் ஒழுக்கவியல் கோட்பாடுகளின் தேவைப்பாடுகளுடன் இணங்குமென நான் எதிர்பார்ப்பதுடன் நிதிக்கூற்றுக்கள் தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்டு கணிய ரீதியாக சரியான கூற்றுக்களாக உள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வானது திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டியுள்ளது. இத்தகைய நியமங்கள் நான் நெறிமுறைகள் மற்றும் தணிக்கையின் தேவைகளுக்கு ஏற்ப இணங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது மற்றும் நிதிநிலை அறிக்கைகள் அளவுக்கதிகமாக தவறான அறிக்கைகளிலிருந்து விடுபடுவதை உறுதிசெய்ய திட்டமிட்டு செயல்படுத்தப்படும்.

கணக்காய்வு என்பது நிதிநிலை அறிக்கைகளில் உள்ள பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்களுடன் தொடர்புடைய கணக்காய்வு சான்றுகளைப் பெறுவதற்கான நடைமுறைகளை நிறைவேற்றுவதுடன் தொடர்புபடுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நடைமுறைகள், மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை அறிக்கைகளில் ஏற்படக்கூடிய கணக்காய்வாளரின் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டவை,

இந்த இடர் மதிப்பீடுகளில், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, காலத்திற்குக் காலம் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளினை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் நிதி கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வதுடன் நிதியத்தின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தக் கருதுவதில்லை.

கணக்காய்வானது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளினை மதிப்பீடு செய்தல் என்பவற்றினையும் அவ்வாறே, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றினையும் உள்ளடக்குகின்றது. நான் பெற்றுக் கொண்ட கணக்காய்வுச் சான்றானது போதுமானதெனவும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான பொருத்தமான அடிப்படையினையும் வழங்குகின்றது என்பதனையும் நம்புகின்றேன்.

1.4 புள்ளிவிபர அபிப்பிராயத்துக்கான அடிப்படை

எனது அபிப்பிராயமானது இந்த அறிக்கையின் பந்தி 2.2 இனை அடிப்படையாகக் கொண்டதாகும்.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 புள்ளிவிபர அடிப்படையிலான அபிப்பிராயம்

நான், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக 2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றினையும் 2017 டிசம்பர் 31 இலுள்ளவாறான புத்தசாசன நிதியத்தின் உண்மைத் தன்மையினையும் நியாயத் தன்மையினையும் பிரதிபலிக்கும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இனால் பாதிக்கப்பட்டவை தவிர்ந்த நிதிக் கூற்றுக்கள் என நான் கருதுகின்றேன்.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரை

2.2.1. கணக்காய்வுக்கான போதிய அதாரமின்மை

கீழ்க்காணும் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் காட்டப்பட்ட ஆதாரம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. எனவே, அவற்றினை வவுச்சரிடுவதும் ஏற்றுக் கொள்வதும் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களின் போதாமையினால் திருப்பதிகரமாக மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை.

தொ.இ	விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்று
(i)	புத்த தர்ம நூல்கள்		மதிப்பாய்வுச் சபை அறிக்கை
(ii)	சுனாமி நிவாரணம்		விரிவான தகவல்

2.3. சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைதொடர்பானவை

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை

(அ) நிதி ஒழுங்குவிதிகள் 396

2013 இலிருந்து 2016 வரையிலான காலப்பகுதியில் ரூபா.59,363/- மொத்த தொகையில் வழங்கப்பட்ட 07 காசோலைகள் தொடர்பில் இந்த அறிக்கைத் திகதி வரையில் நிதி ஒழுங்குவிதிகளுக்கமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி ஒழுங்குவிதி 502 (2)

நிதியத்தின் ரூபா.10,332,645/- பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

2.4 பெறத்தக்க மற்றும் செலுத்தத்தக்க கணக்குகள்

2.4.1பெறத்தக்க தொகைகள்

வயது பகுப்பாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா.13,031,828 தொகையுடைய முற்பணம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் ரூபா.1,087,447 மற்றும் ரூபா.11,944,381 என்பன முறையே 5 வருடங்கள் மற்றும் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் மீதிகளாக உள்ளனதுடன் (முன்னைய ஆண்டுகளின் நிதிக்கூறுக்களுக்கமைவாக) இத்தகைய மீதிகளினை அறவீடு செய்வதற்குக் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2.4.2 செலுத்தத்தக்க தொகைகள்

வயதுப் பகுப்பாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத நடைமுறைப் பொறுப்புக்களில் ரூபா.1,712,435 தொகையில் ரூபா. 544,409 மற்றும் ரூபா. 1,168, 025 ஆகிய தொகைகள் முறையே 3 மற்றும் 2 வருடங்களுக்கு மேற்பட்டவையாக உள்ளன. (முன்னைய ஆண்டுகளின் நிதிக்கூறுக்களுக்கமைவாக) இத்தகைய மீதிகளினை தீர்ப்பனவு செய்வதற்கு இதுவரையில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதிசார் மீளாய்வு

3.1. நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களுக்கமைவாக, மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் நிதிக்கூற்று பெறுபேறானது ரூபா. 41,905,243 மிகையாக இருந்துள்ளது. முன்னைய ஆண்டின் மிகையான ரூபா. 25,852,041 உடன்

ஒப்பிடுகையில், ரூபா.41,905,243 வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. ரூபா.17,087 இனால் முதலீட்டு வட்டி வருமானமானது அதிகரித்தமையே இதற்கான பிரதான காரணமாக அமைந்துள்ளது.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 தொழிற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வு ஆண்டில் நிதியத்தின் மூலதன வட்டி மற்றும் ஏனைய வருமானங்களாக ரூபா.52,058,913 பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், அதில் ரூபா.10,153,670 அதாவது 19% நிதியத்தின் நோக்கங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. மிகை காசானது வருடாந்தம் முதலீடு செய்யப்படுவதுடன் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான முதலீட்டின் மொத்தப் பெறுமதியானது ரூபா.503,954,295 ஆக இருந்துள்ளது. நிதியத்தின் தொழிற்பாடானது புத்தசாசனத்தினைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் மிகவும் பொருத்தமான வேலைகளுக்கு நிதியளிப்பதனை நோக்கமாக கொண்டுள்ள போதிலும், நிதியமானது வருடாந்தம் நிதியத்தினால் பெற்றுக் கொள்ளப்படும் வருமானத்திற்கேற்றவாறான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த தவறியுள்ளது.

(ஆ) அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் கருத்திட்டங்களுக்காக மீளாய்வு ஆண்டுக்கான செயல்திட்டத்திற்கமைவாக ரூபா.47,910,000 மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், குறித்த கருத்திட்டங்களுக்காக ரூபா. 9,773,279 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. இதில், ரூபா.10,000,000 மற்றும் 5,000,000 என்பன முறையே குறைவிருத்தி விகாரைகளுக்கான மடாலயங்களை நிருமாணிப்பதற்கும் இடர்பாடுடைய விகாரைகளுக்கான சுகாதார நலன் பேணல் வசதிகளினை வழங்குவதற்காகவும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. ஆனால், இத்தகைய நோக்கங்களுக்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. பொறுப்புக்கூறலும் நல்லாட்சியும்

5.1 நிதிக் கூற்றுக்களினைச் சமர்ப்பித்தல்

நிதிக் கூற்றுக்கள், 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியிலிருந்து பதிவு செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 877(2)(ஈ) மற்றும் 2006.12.22 ஆம் திகதிய PF/423 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கமைவாக, நிதியாண்டு முடிவடைவதிலிருந்து 2 மாதங்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்ற போதிலும், மீளாய்வு ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2 வருடங்களும் 7 மாதங்களும் கடந்த நிலையில் தாமதமாகவே கணக்க்ய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

நிதியத்தின் செயலாளருக்கு கணக்காய்வின் பொது அவதானிக்கப்படும் குறைபாடுகள் தொடர்பில் அவ்வப்போது அறிவிக்கப்படுவதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) நாளேட்டு வவுச்சர்களை சமர்ப்பித்தல்

(ஆ) நோக்டகங்களுக்கமைவான செயலாற்றுகை மட்டம்

(இ) செலுத்தப்பட வேண்டிய மற்றும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதி

(ஈ) முதலீடும் நிதிகளின் பயன்பாடும்.

டப்பிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி